ஏழைகள் உழைப்பிற்கு கூலி கொடுக்க மனமில்லாத ஒன்றிய பா.ஜ.க. அரசு!

# உழைக்கும் மக்களையே ஊழல்வாதிகள் என முத்திரை குத்த தமிழ்நாடு பா.ஜ.க.வினர் களமிறக்கப்பட்டிருக்கிறார்கள்!

## கனிமொழி கருணாநிதி எம்.பி. கண்டனம்!

சென்னை, மார்ச் 30-

ஏழைகள் உழைப்பிற்குக் கூலி கொடுக்க மனமில்லாத ஒன்றிய பா.ஜ.க. அரசு, உழைக்கும் மக்களையே ஊழல்வாதிகள் என முத்திரை குத்ததமிழ்நாடுபா.ஜ.க.வினர் களமிறக்கப்பட்டிருக்கிறார்கள் என கழகத் துணைப் பொதுச்செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. தெரிவித்துள்ளார்.

அவர் தெரிவித்திருப்பதாவது:-

"உழைப்பவன் கூலியை வியர்வை உலர்வதற்கு முன்பு கொடுத்துவிடு" எனச் சொல்கிறது ஒரு பொன்மொழி.

ஆனால், எளியவன் உழைத்தாலும் கூலியைக் கொடுக்காமல் வயிற்றில் அடி என்கிறது ஒன்றிய அரசின் புதுமொழி. 100 நாள் வேலைத் திட்டத்திற்கான சம்பளப் பாக்கி 4,034 கோடி ரூபாயை நிறுத்தி வைத்து கொடுங்கோல் ஆட்சியாகவே மாறிவிட்டது ஒன்றிய அரசு. வறுமையின் காரணமாக 100 நாள் வேலையில் இணைந்து உழைப்பவர்கள் அனைவரையும் ஊழல்வாதிகள் போலச் சித்தரித்து ஊதியப் பணத்தைக் கொடுக்க மாட்டோம் என்பது கொடுங்கோல் ஆட்சியில் கூட நடக்காதது. ஏழைகள் உழைப்பிற்குக் கூலி கொடுக்க மனமில்லாத ஒன்றிய பா.ஜ.க. அரசு, உழைக்கும் மக்களையே ஊழல்வாதிகள் என முத்திரை குத்த தமிழ்நாடு பா.ஜ.க.வினர் களமிறக்கப்பட்டிருக்கிறார்கள்.

100 நாள் வேலைத் திட்டத்திற்கான நிதியை ஒதுக்கச் சொல்லி முதலமைச்சர் அவர்கள் கடிதம் எழுதி வலியுறுத்தினார்; நாடாளுமன்றத்தில் தி.மு.க. மற்றும் தி.மு.க. கூட்டணி உறுப்பினர்கள் குரல் எழுப்பினார்கள். பைசா கூட ஒதுக்காத ஒன்றிய அரசைக் கண்டித்து தமிழ்நாடு முழுக்க திமுக போராட்டம் நடத்தியது. மோடி அரசுக்கு எதிரான போராட்டத்தைப் பொறுத்துக் கொள்ள முடியாமல் தவிக்கிறது கமலாலயம்!

தமிழ்நாட்டின் ஏழைகள் ஊதியமின்றி தெருவில் நிற்கும் போது ஒன்றிய அரசிடம் போராடி பணத்தைப் பெற்றுத் தருவதுதானே தமிழ்நாட்டைச் சார்ந்தவர்களின் கடமையாக இருக்க வேண்டும்?

கல்வி நிதி, பேரிடர் நிதியை எல்லாம் தராத ஒன்றிய அரசு, இப்போது 100 நாள் வேலை பணியாளர்களின் ஊதியத்தை நிறுத்தி அவர்களைப் பட்டினி போடுகிறது. உழைப்பை உறிஞ்சிக்கொண்டு ஊதியத்தைக் கேட்பவர்களையே கொச்சைப்படுத்தும் பா.ஜ.க.வினருக்குத் தமிழ்நாட்டு மக்கள் தக்கப் பாடம் புகட்டுவார்கள்.

இவ்வாறு கனிமொழி கருணாநிதி எம்.பி. தெரிவித்துள்ளார்.

---

முதல்வர் பிறந்த நாள் : சி.கே.வி. தமிழ்ச்செல்வன் தலைமை! ஏ.எஸ்.முத்துசெல்வம் ஏற்பாட்டில்

# காஞ்சிபுரம் மாநகர தி.மு.க. சார்பில் நலத் திட்ட உதவிகள்!

## மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. வழங்குகிறார்!

காஞ்சிபுரம், மார்ச், 30,

காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட தி.மு.க. காஞ்சிபுரம் மாநகரம் சார்பில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 72 வது பிறந்த நாள் விழாவினை முன்னிட்டு காஞ்சிபுரம் முருகன் பட்டு கூட்டுறவு சங்கத் தலைவரும், மாநகரக் கழக துணைச் செயலாளருமான ஏ.எஸ். முத்துசெல்வம் நிகழ்ச்சி ஏற்பாட்டில் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா இன்று (30.9.2025-ஞாயிற்றுக் கிழமை) காலை 9 மணிக்கு கோகுல் திருமண மண்டபம், பூக்கடை சத்திரம், காஞ்சிபுரத்தில் நடைபெறுகின்றது.

நிகழ்ச்சிக்கு மாநகரச் செயலாளர் சி.கே.வி. தமிழ்ச்செல்வன் தலைமை வகிக்கிறார். மாநகர துணைச் செயலாளர் ஏ.எஸ். முத்துச்செல்வம் தலைமை வகிக்கிறார்.

கே.ஏ. செங்குட்டுவன், வ.ஜெகன்நாதன், பி.நிர்மலா, கு.சுப்பராயன், கே.திலகர் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

நலத்திட்ட உதவிகளை வழங்கி மாவட்டக் கழகச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. வழங்கி சிறப்புரையாற்றுகின்றனர்.

இதில் சிறுவேடல் க.செல்வம் எம்.பி., சி.வி.எம்.பி. எழிலரசன் எம்.எல்.ஏ., மேயர் மகாலட்சுமி யுவராஜ், சன்பிராண்ட் கே.ஆறுமுகம், எஸ்.கே.பி. சீனிவாசன், எஸ்.சிகாமணி, ஜி.சுகுமாரன், தி. அன்பழகன், பெ. சுந்தரவரதன், வி.எஸ். ராமகிருஷ்ணன், எஸ்.சந்துரு, அ.தசரதன், சு.வெங்கடேசன், அ.யுவராஜ், எஸ்.சுகுமாரன், த.விஸ்வநாதன், ஜெ.வரதராஜன், எஸ்.சேகர், அ.பாலமுருகன், ப.சுரேஷ், எஸ். மாமல்லன், பி.சங்கர், ப. சுகுமார், இலக்கியாசுகுமார், ஜி.குமரேசன், ரா.வினோத்குமார், பி.எஸ்.குடியரசு, பா.தனலட்சுமி, எம்.மகாதேவன், எ.வரதராஜன், வி.பகவான், எஸ்.எழில்குமார், பி.சிவக்குமார், பா.கௌரி சங்கரன், ஜெ.இளங்கோவன், எம்.ரமேஷ், டி.அசோக்குமார், எஸ்.பிரசாந்த், விஜயாராமலிங்கம், கனவள்ளி சுதர்சணன், மற்றும் பலர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

5வது வட்டக் கழகப் பொறுப்பாளர் பி.எஸ். செல்வகுமார் நன்றிகூறுகிறார்.

---

அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலை! ஜி.எம்.தேவன் தலைமையில்

# சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் மக்கள் முதல்வரின் மனிதநேய விழா! மாபெரும் புகழரங்கம்!

## திருச்சி சிவா எம்.பி. – டி.கே.எஸ்.இளங்கோவன் – பேராசிரியர் அரங்க மல்லிகா சிறப்புரை!





சென்னை, மார்ச் 30-

சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், கழக தலைவர் 72வது பிறந்தநாள் மக்கள் முதல்வரின் மனிதநேய விழாவை முன்னிட்டு - துறைமுகம் கிழக்கு பகுதி சார்பாக, மாபெரும் புகழரங்கம் - கழக கொள்கை பரப்புச் செயலாளர், மாநிலங்களவை குழு தலைவர் திருச்சி சிவா எம்.பி, கழக செய்தி தொடர்புச் செயலாளர் டி.கே.எஸ்.இளங்கோவன், பேராசிரியர் அரங்க மல்லிகா, ஆகியோர் புகழுரைத்தனர்.

சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில் மக்கள் முதல்வரின் மனிதநேய விழாவை முன்னிட்டு, மனிதநேயம் 36, ஆற்றல் படைத்த மாமனிதர்! அனைவரும் போற்றும் ஒரே தலைவர்!! எனும் தலைப்பில் துறைமுகம் கிழக்கு பகுதியில் மாபெரும் புகழரங்கம் 29.03.2025 சனிக்கிழமை அன்று மாலை 6.00 மணியளவில், சென்னை, மண்ணடி, தம்புசெட்டி தெருவில் நடைபெற்றது.

இப்புகழரங்கத்தில் மாவட்ட துணை செயலாளர் ஜி.எம்.தேவன் தலைமை வகிக்கிறார். சென்னை கிழக்கு மாவட்டக்கழக செயலாளரும், இந்து சமய அறநிலையத் துறை (ம) சென்னை பெருநகர வளர்ச்சி குழும அமைச்சர் பி.கே.சேகர்பாபு, சென்னை பெருநகர மேயர் பிரியா ராஜன், எஸ்.இராஜசேகர், எஸ். முரளி, இரா.நரேந்திரன், எம்.விஜயகுமார், ப.ஸ்ரீராமுலு எம்.சி, இசட்.ஆசாத் எம்.சி, பா.ஜெகதீஷ், என். பி.எம்.சேக் அப்துல்லா, ஆர்.கலைச்செல்வி, எம். இப்ராஹிம்கனி, பி.விஜயகுமார், எம்.விநாயகம், பா.பிரதீப்கமார், எல்.சம்பத்குமார் முன்னிலை வகித்தனர்.

ந.சுந்தரம், எஸ்.சந்தியாகு, செ.தமிழ்வாணன், சி.ப.ஜெயராமன், ம.முத்துகுமார், மே.ஜனார்த்தனன், கே.ஆர்.அபரஞ்சி, வி.சந்தானலட்சுமி. துறைமுகம் கிழக்கு/மேற்கு வட்ட கழக செயலாளர்கள்: கதிரவன் (எ) ராஜா, எல்.சத்திய நாராயணன், எஸ்.புகழேந்தி, ஆர்.எ.அஸ்லாம், எம்.பரத்குமார், மா.ஜெய்சங்கர், பா.கதிரவன், ஆர். ரவிச்சந்திரன், ஜி.ராமமூர்த்தி, பா.அண்ணாதுர, டி.சதிஷ்குமார், சேப்பாக்கம் வே.பா.பிரபாகரன் ஆகியோர் வரவேற்றனர்.

மேலும் இப்புகழரங்கத்தில் கழக கொள்கை பரப்புச் செயலாளர், மாநிலங்களவை குழு தலைவர் திருச்சி சிவா எம்.பி, கழக செய்தி தொடர்புச் செயலாளர் டி.கே.எஸ்.இளங்கோவன், பேராசிரியர் அரங்க மல்லிகா ஆகியோர் புகழுரைத்தனர்

மேலும், இப்புகழரங்கத்தில் எச்.எம்.சீமாபசிர், ஆர்.பி.ரமேஷ் சுதாதீன தயாளன், ராஜேஷ்வரிஸ்ரீதர் இ.ஜெய்சங்கர் சி.எம். சசிக்குமார் எஸ்.மதன் எம்.மணிமாறன் டி.கே. கலைவாணன் எம்.எஸ். அசாருதீன் வி.எல்.யஷ்வந்த் நா.மோகன் ஏ.திருப்பதி பி.விஷ்ணுசக்கரவத்தி ஏ.ஆனந்த் எம்.சண்முகசுந்தரம் கே.சூர்யபிரகாஷ் பி.செந்தில்குமார் அ.சுமன்ராஜ் க.பாலாஜி எஸ்.இம்ரான்கான் டி.பிலிப்ஸ் த. தமிழ்அரசு முகமதுரிபாமி ஜே.லோஜேஷ் ஜி.மோகனசுந்தரம் பி.லோகேஷ் பி.கார்த்திக் எஸ்.முகேஷ் சிவக்குமார் டி.நரேஷ் த. ஜெயசூரியா டி.சுபாஷ் சந்திரபோஸ், பி.ஜி.சுகுமார் ஏ. மதுசூதனன் கு.கரிகாலன் ஆர்.ராஜேஷ் எம். சிலம்பரசன் என்.அபிஷேக் ஆர்.தங்கமணி என்டன்.கூ.முருகன் சேகர்[ஆர்]பிரஸ்சேகர் ஆபோ. கே.சம்பத் டி.எஸ்.சேகர் ஹாலி முகமது அலி வி.அசோக்குமார் வி.எம். முருகவேல் எம்.நாராயணன் எம்.சுரேஷ் எம்.சகாயராஜ் கே.ஆர்.மதன் நா.ரஞ்சித் விஜயாலயன் எம்.வி.ஆர். சரவணக்குமார் ஏ.பி.எஸ். செந்தில்குமார் எல்.எழிலரசு ஜி.மாசிலாமணி பேண்டு எஸ். கதிர் ஏ.மகேந்திரன் எம். பி.ஏழுமலை ஏ.முகமது ரஃபிக் இ.ராஜேஸ்வரி ஜி.எம்.டி.மணிகண்டன் கே.ஏ.துரை எஸ்.குணசேகரன் டி.மல்லிகுமார் கே. எட்வட்வட் கெண்ணடி எஸ்.முகந்து சாய் தம்பி மு.ஹாஜா ஜல்லுதீன் த. பன்னீர்செல்வம் மு.ஜெயவேல் முருகம்மாள் யூ. நாசர் கதிரவன் அ.முகமது முக்தார் ரா.பிரபு ர.அன்பு ரா.ரவிக்குமார் சாய் டிஜிட்டல் அறிவதுஆ.நா. பார்த்திபன் கே.கவியரசு மற்றும் கழக முன்னோடிகள் செயல்வீரர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இப்புகழரங்கத்தில் வட்ட செயலாளர்கள் ஆ.நா.பார்த்திபன் கே.கவியரசு ஆகியோர் நன்றி கூறினார்கள்.


